2013 மார்ச் 26]

அமைக்கப்பட்டு அங்கே பேருந்துகள் வரவில்லையென்று சொன்னால், அங்கு பேருந்துகள் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே அனைத்து அடிப்படை வசதிகளும் குறைவாக இருக்கின்றபட்சத்தில், அவை முறையாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

தொழிற்பேட்டை

***21836 திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், வந்தவாசி தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே இதுவரை எந்த ஒரு தொழிற்பேட்டையும் இல்லை. அதனால், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் அரசுக்குச் சொந்தமான சர்வே எண் 386-ன்கீழ் 145 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்றாலுங்கூட, அந்த மாவட்டத்தில் போளூர் வட்டம், பாப்பாம்பாடி மற்றும் முருகப்பாடி கிராமங்களில் 60.83 ஏக்கர் நிலப்பரப்பும் மற்றும் செங்கம் வட்டம், கட்டமடுவு கிராமத்தில் 83.78 ஏக்கர் நிலப்பரப்பும் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு அரசின் மூலமாக இன்றையதினம் அங்கு புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க நிலம் வேண்டுமென்று மாவட்ட வருவாய் அலுவலரிடம் கேட்கிறபோது, அந்தப் பகுதியிலே 20 ஏக்கர் நிலமோ அல்லது 50 ஏக்கர் நிலமோ இல்லையென்று எங்களுக்குத் தகவல் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், தொழிற்பேட்டை அமைக்க தகுதியுடைய நிலம் இருக்கிறது என்று வந்தவாசி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு அலுவலர்களிடத்திலே சொல்லி உடனடியாக அந்த இடங்களைப் பார்வையிடச் செய்து, தகுந்த முறையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு*

2013 மார்ச் 26]

தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய தொகுதியான குன்னம் தொகுதியில், ஆலத்தூர் ஒன்றியத்தில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இது திருச்சி–சென்னை நெடுஞ்சாலையையொட்டி அமைந்திருக்கின்ற பகுதி. அங்கே ஒரு தொழிற்பேட்டை கொண்டுவந்தால் எங்கள் பகுதி வளர்ச்சிபெற மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த மாவட்டமாக இருந்தாலும் தகுதியுடைய நிலங்கள் இருக்குமேயானால், அதிலே 20 தொழில் முனைவோர்கள் திட்டங்களுடன் முன்வருவார்களேயானால், அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*